1983 பிப்ரவரி 14]

பெயர்ப்பலகை விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் அளிக்கப் பட வேண்டியதற்கான விதிமுறைகள்.

* வினா எண் 270—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெயர்ப்பலகை விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் தரப் படவேண்டிய அரசு சட்டத்தை முழுமையாக நடைமுறை படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15 ஆவது விதியின்படியும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதி 42பியின்படியும் தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களிலுள்ள பெயர்ப்பலகைகள் தமிழிலேயே எழுதப்படவேண்டுமென்றும் பிற மொழிகளில் எழுதப்படுமிடத்து அவை தமிழ்ப்பெயருக்குக் கீழ் அமைதல் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விதி முறைகளை முழுமையாக நிறைவேற்ற தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று எல்லாத் தொழிலாளர் துறை ஆய்வாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. பாபு. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் பலகைகளில் விளம்பரங்களில் தமிழுக்கு முதலிடம் தரப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விளம்பரங்களை கடைகளில் மட்டும் அல்லாமல், அலுவலகங்களில் மட்டும் அல்லாமல், மத்திய அரசு அலுவலகங்களிலும் தமிழுக்கு முதலிடம் தரவேண்டும் என்று சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த அரசு முயலுமா என்று அறியவிரும்பிகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே படித்த 2 சட்டத்தின் கீழ் அதை வலியுறுத்த இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உத்திரவை நிறைவேற்றுகிற வகையில் பல தொழில் நிறுவனங்களும், வியாபாரத் தலங்களும்—பல மாநிலத்தவர்கள்—ஏதோ தமிழை சிறிதாகவும் அவர்களுடைய மொழியை பெரியதாகவும் பெயர்ப்பலகைகளில் இன்றையதினம் போடுகிற நிலமை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலமையை மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா? அல்லது அப்படிப்பட்ட நிறுவனங்

களுக்கு அதை மாற்றுவதற்கு ஒரு காலக்கெடுவை கொடுத்து முதலில் தமிழை பெரிய எழுத்திலும் பிறகு மற்ற மொழிகளில் போட்டுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அப்படி நிலைமை மாறாவிட்டால் ஒரு காலத்தில் இந்தி எழுத்துக்களை அழிப்பதற்காக மக்கள் எழுச்சி கொண்டதைப் போல் அத்தகைய நிலைமைகள் உருவாகாமல் இருப்பதற்கு இந்த அரசு வழிவகைகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 சட்டத்தின் கீழ் கடைகள், நிறுவனங்கள் அது மட்டும் அல்லாமல் உணவு நிறு வனங்கள் அது மத்திய அரசு வைத்துஇருந்தாலும், யார் வைத்து இருந்தாலும் வலியுறுத்தலாம், இல்லை என்றால் 'பிராசிக் குஷன் செய்யலாம். அந்த வகையில் இருக்கவேண்டும் என்பதற் காக அண்மையில் ஒரு நோட்டிபிகேஷன் கொடுத்து இருக்கிறோம் அந்த நோட்டிபிகேஷன் பிறகு கன்பார்ம் செய்யப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முழு மன நிறைவுதரும் என்று கருதுகிறேன். அந்த நோட்டிபிகேஷனை இப்போது படிக்கிறேன்.

(முற்பகல் 9.50)

1. நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் தமிழிலேயே எழுதப் படவேண்டும். மற்ற மொழிகள் பயன்படுத்துமிடத்து ஆங்கிலப் பெயர் இரண்டாவது இடத்திலும் பிற மொழிகள் ஏதாவது பயன்படுத்தப்பட்டால், அது மூன்றாவதாகவும் எழுதப்படவேண் டும். எனினும் இம்மூன்று மொழிகளும் ஒரே பெயர்ப்பலகை யிலேயே எழுதப்படவேண்டும்.

2. பெயர்ப்பலகையில் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளை உபயோகிக்குமிடத்து, அவைகள் 5:3:2 என்ற விகிதாச்சாரத்தில் எழுதப்படவேண்டும்.

3. பெயர்ப்பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் திருத்திய எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும். புதிதாகத் திருத்தி யிருக்கிறோமே அண்ணா என்றால் எப்படி எழுதவேண்டுமென்று அப்படி எழுதவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இவ்வாறு நோட்டிபிகேஷன் கொடுத்திருக்கிறோம் அது விரைவிலே வெளியிடப்படும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மத்திய அரசுக் கட்டிடங்களிலேயும் இந்த சட்டத்தை அமல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பக்கத் திலே வானுயர்ந்த கட்டிடம் மிகப் பெரியதாக இருந்தாலும் அதிலே என்ன எழுதியிருக்கிறது என்று புரியாத நிலையில்

1983 பிப்ரவரி 14]

தமிழக மக்கள் இருக்கும்போது ஏன் இந்தச் சட்டத்தை அப்படிப் பட்ட இடங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடாது? மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் தமிழ்தான் இருக்கவேண்டு மென்ற நிலைமையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, (Catering and Shops Establishment Act.) பொறுத்த வரையில் இதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். இதற்கு மேல் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்றால் வேறு சட்டம்தான் அரசு கொண்டுவரவேண்டும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மீறியவர்கள் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா? காரணம் பல இடங்களிலே தமிழில் எழுதப்படாமல் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஆகவே தமிழில் எழுதாதவர்கள்மீது நட வடிக்கை எடுத்து தண்டனை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, மீறுகிறவர்கள் மீது நீதிமன்றத்திலே வழக்குகள் தொட ரப்பட்டிருக்கின்றன. எத்தனை பேர்கள் என்ற குறிப்பு என்னிடத் திலே தற்சமயம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தூய தமிழ் என்று சொல்லிக்கொண்டு, சென்னை நகரத்திலே, அர்மீனியன் ஸ்ட்ரீட், என்பதற்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தூய தமிழ் என்று சொல் கிறீர்கள் ஆங்கிலத்திற்கு எதற்குப் போகிறீர்கள்?

திரு. மு. அம்பிகாபதி : அர்மீனியன் ஸ்ட்ரீட் என்றால் அந்தக் காலத்திலே அர்மீனியர்கள் இருந்தார்கள் என்பதால் அந்தப் பெயர் இடப்பட்டிருந்தது, ஆனால் இப்போது அர் மீனியன் என்பதற்கு அரண்மனை என்று பொருள்கொண்டு அந்தத் தெருவுக்கு அரண்மனைக்காரத் தெரு எழுதக்கூடிய இவ்வளவு பெரிய ப்ளன்டர் சென்னையிலேயே நடந்திருக்கிறதே இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப்பற்றி நட வடிக்கை எடுப்பார்களா? (விடை இல்லை).

உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான திட்டங்கள்.

*வினா எண். 271—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—